# சில்மியின் பத்வா

---

பிஸ்மில்லாஹ் ஹிர் ரஹ்மானிர் ரஹீம், அல்ஹம்துலில்லாஹ்,
வஸ் ஸலாத்து வஸ் ஸலாம் அலன் நபிய் அமா பஃத்

யஹ்யா ஸில்மியின் அடுத்த சில்மிசம் பதிலுக்கு(?) பதில் என்று பி. ஜெ. கொள்கைக்கு உட்பட்ட ஸ்ரீ லங்கா தவ்ஹீத் ஜமாத்தின் ஒரு பிரச்சாரகர் அவருடைய விமர்சனத்தை பின்வருமாறு ஆரம்பிக்கிறார். அதாவது " சுய இன்பத்தை(?) ஹலாழாக்கிய யெஹ்யா சில்மியின் கேடு கெட்ட பத்வா " என்று மார்க்கத்தின் ஒரு பிஃஹ் விடயத்தின் தீர்ப்பை சாடுகிறார். இது ஷேக் யஹ்யா சில்மியின் தனிப்பட்ட ஆராச்சியில் வெளிவந்த ஒரு விடயமா ?. மாற்றமாக
இது இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அனுமதியை , தாவுஸ் இப்னு கைஸான் போன்ற தாபியீன்களின் கருத்தும் இது தான் என்று ஓடியோவில் கூறி இருக்க, இவர்களும் இது இமாம் அஹ்மத் இப்னு ஹம்பல் ரஹீமஹுல்லாஹ் அவர்களின் கருத்தும் கூட என்று சொல்லிக் கொண்டு, இந்த பத்வாவை கேடு கெட்ட பத்வா என்று இவர்கள் கூறுவது , இவர்கள் தெளிவான் பி. ஜெ. அண்ணனின் வழியில் பி. ஜெ. கொள்கைக்கு உட்பட்டவர்கள் என்பதன் சான்றுகளாகும். ஏனெனில், அருமை சஹாபாக்களை கிரிமினல் என்று விமர்சிப்பதில் அண்ணன் பின் வாங்கியவர் அல்ல . எனவே, அண்ணன் வழியில் இந்த தம்பிகள் மார்க்க தீர்ப்புகளை இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் தீர்ப்பின் அடிப்படையில் கூறினாலும் அது கேடு கெட்டது என்று சொல்வதில் ஆச்சரியப் படத்தேவையில்லை.

அடுத்ததாக , ஏற்கனவே, நாம் ஓடியோவில் கூறிய ஆதாரங்களை பார்க்காமல் , கேட்காமல் எந்த விதமான மறுப்பும் சொல்லாமல் மொட்டையாக எமது இந்த கட்டுரையை பாருங்கள் என்று ஒரு லிங்கை கொடுத்தார்கள்.
எனவே, இவர்கள் இப்படி மொட்டையாக விமர்சித்தார்கள் என்று நாம் சுட்டிக் காட்டி, இவர்களது இந்த விடயத்தின் அடிப்படையான குர் ஆன் வசனத்தில் இவர்களது கோளாறை சுட்டிக் காட்டி , இந்த கோளாறின் அடிப்படையில் வந்த ஏனைய கோளாறுகளுக்கு இதுவே போதும் என்ற அடிப்படையில் விமர்சனத்தை
முன் வைக்க , இவர்களோ " சலபி கும்பல் பதில் தர முடியாமல் தலையில் துண்டை போட்டுள்ளது " என்றும், இவர்கள் ஒரு குர் ஆன் வசனத்துடன் மட்டும் நின்று விட்டார்கள் ஏன் என்று வாசகர்கள் புரிந்திரிப்பீர்கள் என்றும் வீர வசனம் பேசுகிறார்கள். இந்த விடயத்தின் ஆணி வேர் இந்த குர் ஆன் வசனம் , இந்த வசனத்தை , சஹாபியின் வார்த்தையுடன் சேர்த்து விளங்க தெரியாமல் , தான் தோன்றித் தனமாக தனது சுய விளக்கத்தில் விளக்கம் சொல்லி, இந்த சுய விளக்கத்துக்கு வலு சேர்க்க சம்பந்தமே இல்லாத ஹதீதுகளை சேர்த்துக் கொண்டு இவர்கள் தடுமாறுவதை

அவதானித்து தான் , மூலத்தில் இவர்கள் விட்ட கோளாறை சுட்டிக் காட்டி சுருக்கமாக விமர்சனம் செய்யப்பட்டது. இதனை விளங்காத இந்த பத்தாம் பசலிகள் துண்டை போட்டார்கள், சட்டியில் இருந்தால் தானே ... என்றெல்லாம் வீர வசனம் பேசி தனது மடமையை மறைக்க பார்க்கிறார்கள். இவர்களது மடத்தனத்தை கீழே பார்க்கலாம்.

(நம்பிக்கை கொண்டோர்)தமது மனைவியர் அல்லது தமது அடிமைப் பெண்களிடம் தவிற தமது கற்பை காத்துக் கொள்வார்கள் அவர்கள் பழிக்கப் பட்டோர் அல்லர்.இதற்கு அப்பால் வேறு வழியை)தேடியவர்களே வரம்பு மீரியவர்கள்.(23:5,6,7)

மேலே, குர் ஆன் வசனத்தில் வெட்கத்தலங்களை என்ற சொல்லுக்கு இவர்கள் கற்பு என்று தமிழாக்கம் செய்த்திருப்பதை சுட்டிக் காட்டி ஷேக் இக்பால் மதனியின் தர்ஜுமாவை பார்க்க சொன்னால், இதை விளங்காத , அல்லது விளங்க தெரியாத இந்த பி. ஜெ. கும்பல், நாம் அதே வசனத்தில் வரும் பிந்திய வார்த்தைகளை தந்திரமாக மறைக்கும் தன்மை கொண்டவர்கள் என்று பல்டி அடித்து அவர்களது இருட்டடிப்பு கைங் கரியங்களை எமது தலையில் சுமத்த பார்க்கிறார்கள். இது தான் இவர்களது சாட்டையடி கைங் கரியங்கள். பார்த்துக் கொள்ளுங்கள்.

மேலும், இவர்கள் மொழியாக்கம் செய்த கற்பு என்ற சொல்லின் அர்த்தத்தில் மொழி ரீதியாக கூட சுய இன்பம் கற்பை இல்லாது செய்துவிடும் , அல்லது கற்பை இழந்தவர் ஆகி விடுவார் என்று கருத்து இல்லை என்பதை தான் கற்பு இல்லை என்றால் என்ன என்று மொழி ரீதியாக விளங்க படுத்தப் பட்டது. அத்தோடு, இதனால் தான்
இவர்களுக்கு உலகறிவும் கிடையாது மார்க்க அறிவும் கிடையாது என்று சொல்லப்பட்டது. ஆனால் இதற்கு ஒரு பல்டி அடித்து , செய்வதறியாது, " மேற்கண்ட வசனத்திற்கு விளக்கமாக நபி(ஸல்)அவர்கள் குறிப்பிட்டுள்ள ஒரு செய்தியைப் பாருங்கள் " என்று கூறி அஹ்மதில் வரக் கூடிய ஒரு ஹதீதை பதிந்துள்ளார்கள்.
இது இவர்கள் நபி சல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது இட்டுக் கட்டுவதாகும். ஏனெனில், மேற்கண்ட ஆயத்துக்கு இந்த ஹதீஸை நபி சல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ள செய்தி என்று இவர்களுக்கு யார் சொன்னது ? ஆதாரம் தருவார்களா ? இந்த ஆயத்துக்கு விளக்கமாக தான்
இந்த ஹதீஸ் என்று இவர்களுக்கு அறிவித்து கொடுத்தது யார் ? சஹாபியா ?
இது தான் இவர்களது விளையாட்டு, ஒரு ஆயத்தை இவர்கள் விரும்பும் ஒரு ஹதீசுடன் சேர்ப்பார்கள். அல்லது ஒரு ஆயத்தை இவர்கள் தேர்ந்து எடுக்கும் இன்னொரு ஆயத்துடன் சேர்ப்பார்கள். இவ்வாறு தனது கருத்தை ஆயத்தின் விளக்கமாக , ஹதீஸின் விளக்கமாக கூறுவார்கள்.

இதன் காரணத்தால் தான் நாம் சஹாபாக்கள் ஒரு தீர்ப்பு சொன்னால் அதனோடு நின்று கொள்வது. ஏனெனில், அவர்களுக்கு தான் தெரியும் எந்த ஆயத்தை எந்த ஆயத்துடன் சம்பந்தமாக்குவது, எந்த ஹதீஸை எந்த ஆயத்துடன், வேறெந்த ஹதீசுடன் சம்பந்தமாக்குவது எல்லாம் அறிந்தவர்கள். நபி சல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கற்றவர்கள். அவர்கள் மார்க்கத்தில் தன் இஷ்டத்துக்கு , தன் வெறுப்புக்கு பேச மாட்டார்கள். அவர்களது இல்ம் உறுதி செய்யப்பட்ட , உத்தரவாதம் அளிக்கப்பட இல்ம். இவ்வாறு நபியின் தர்பியத்தில் வளர்ந்த இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு, இந்த சுய இன்ப விடயத்திற்கு
அனுமதி அளிக்கிறார்கள். இந்த அறிவிப்பை பல்வேறு சஹாபாக்களிடம் கல்வி பெற்றுக்கொண்ட தாபியீன், தபஉத் தாபியீனுக்கு அறிவிக்கிறார்கள் . இந்த அறிவிப்பை பல்வேறு தாபியீன்களிடம் கல்வி பயின்ற ஏனையோர் அறிவிக்கின்றனர். இந்த அறிவிப்பு மார்க்கத்திற்கு முரணாக இருந்தால் ஏனையோர் மறுக்காமல்
இருக்க மாட்டார்கள். ஏனெனில் , இந்த தாபியீன்கள் ஏனைய சஹாபாக்களிடம் இதற்கு மாற்றமான அறிவிப்புக்களை அறிவிக்காத வரையில் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அறிவிப்பு மறுக்கப்படாது. இது தான் மார்க்கத்தில் சலபுஸ் சாலிஹீன்களின் வழிமுறை. இந்த வழி முறைகளை தூக்கி எறிந்து விட்டு, தான் தோன்றித் தனமாக அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸை இந்த ஆயத்திற்கு விளக்கமாக இவர்கள் தேர்ந்து எடுத்து காட்டுகிறார்கள்.
இந்த பி. ஜெ. கும்பலின் மடத்தனத்திற்கு அளவே இல்லையா ?

மேலும், "ஒருவர் தம் மனைவியை இச்சையுடன் பார்த்து, அதனால் விந்து வெளிப்பட்டால் அவர் நோன்பைத் தொடரலாம்!" என்று ஜாபிர் இப்னு ஸைத் கூறுகிறார். (புகாரி)

இப்னு அபி ஷைபா அவர்கள் அமர் பின் ஹரிம் இடமிருந்து அறிவிக்கிறார்கள் ,ஜாபிர் இப்ன் ஜைத் அவர்களிடம் ஒரு மனிதரை பற்றி கேட்கப்பட்டது " அவர் ரமளானுடைய காலத்தில் தனது மனைவியை இச்சையுடன் பார்த்து அவள் மேலுள்ள மோகத்தால் விந்தை வெளியேற்றி விட்டார் , அவர் கட்டாயம் நோன்பை முறிக்க வேண்டுமா என்று " . இல்லை , நிச்சயமாக அவர் நோன்பை தொடரலாம் என பதிலளித்தார்.

இந்த சம்பவங்களுக்கு இவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள். மேலும் இவர்கள் தேர்ந்து பொறுக்கிய ஹதீஸில், கண்களும் விபச்சாரம் செய்கின்றன என்று உள்ளது. இரண்டு கால்களும் விபச்சாரம் செய்கின்றன என்று உள்ளது. சுய இன்பத்தில் கண்கள் செய்த விபச்சாரம் என்ன ?, கால்கள் செய்த விபச்சாரம் என்ன? என்று
கூறுவார்களா ? மேலும் மர்ம உறுப்பு அதனை மெய் படுத்தும் அல்லது பொய்படுத்தும் என்றும் உள்ளது.

மர்ம உறுப்பு எவ்வாறு பொய்ப்படுத்தும் என்று கூறுவார்களா ? ஹதீஸில் இடை நடுவில் ஒரு துண்டை மட்டும் எடுத்துக் கொண்டு விளக்கம் சொல்வது சரியா ? அல்லது ஹதீஸின் முழுவதையும் எடுத்து விளக்கம் சொல்வது சரியா ? " வேறு வழியில் "என்ற குர் ஆனிய வாசகத்துக்கு இவர்களாக கருதியீடு செய்து புகுத்தியது தான் சுய இன்பம். வேறு வழி என்ற வாசகத்துக்கு விளக்கம் சுய இன்பமும் அடங்கும் என்று நபியும் சொல்லவில்லை ஏனைய சஹாபாக்களும் சொல்லவில்லை. சுய இன்பமும் அதன் விடயங்களும் அந்த காலத்தில் இல்லாத ஒன்றா ? அந்த வார்த்தை அந்த காலத்தில் அறியப்படாத ஒன்றா ? நேரடியாக சொல்ல தெரியாமல் மறைமுகமாக " வேறு வழி என்று " சொல்ல, இவர்கள் வந்து தேடி பிடித்து தந்து விட்டார்கள்.

குர் ஆன் விரிவுரையாளர்களில் எல்லாம் சிறப்பானவர் தான் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள். அவர்களுக்கு இந்த வேறு வழியில் என்ற வாசகத்துக்கு விளக்கம் தெரியாமல் , அல்லது இந்த வசனம் அவர் அறியாதவர் என்று சொல்லப் போகிறார்களா ? இவர்களை பொறுத்த வரை, சஹாபியின் கூற்றை விட இவர்களின் கருதியீடு தான் சரியானது. ஏனெனில், இவர்களே, நபி சல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த ஆயத்துக்கு விளக்கமாக இந்த ஹதீஸை சொன்னார்கள் என்று ஹதீஸின் ஒரு இடை நடுத் துண்டை மட்டும் சொல்பவர்கள் தானே !!. அல்லாஹ் தான் காப்பாற்ற வேண்டும். இவ்வாறு தான், ஹதீசுகளை குர் ஆனுக்கு முரணாக காண்கிறார்கள். சஹாபா விளக்கங்களை அல் குர் ஆனுக்கு சுன்னாவுக்கு முரணாக காண்கிறார்கள். இது தான் இவர்கள் கூறும் சாட்டையடி. கசையடி படும் வரை திருந்த மாட்டார்கள் போலும்.

இதில் வேடிக்கையான விடயம் தான் சுய இன்பம் என்பது " விபச்சாரமாகவே நபித்தோழர்களால் கருதப்பட்டதால் தான் எந்த நபித்தோழரும் சுய இன்பம் செய்து கொள்ளலாமா என்று கேட்டதாக காண முடியவில்லை," என்று நபித் தோழர்கள் மீது தனது கருதியீடால் / கற்பனையால் ஒரு அபாண்டம் இந்த பி. ஜெ. கும்பல் வைத்துள்ளது. ஏன், இது தடையானது அல்ல என்று தெரிந்து அதனை செய்துக் கொள்ளலாமா என்று கேட்காமல் விட்டார்கள் என்று கருத முடியாதா ? இவர்களுக்கு தேவை என்றால் சஹாபாக்களையும் ஆதாரமாக எடுப்பார்கள் . அதுவும் அவர்கள் மீது அபாண்டங்களை சுமத்தி எடுத்து சொல்கிறார்கள். ஆனால் , மாற்றமாக இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அனுமதி செய்தி பதியப்பட்டுள்ளது. இவ்வாறான அபாண்டங்களை ஆதாரமாக சுமத்தி சாட்டையடி என்று வீர வசனம் பேசுகிறார்கள். இவர்களுக்கு தேவை படும் போது சஹாபாக்களை ஆதாரமாக எடுப்பார்கள் , தேவை இல்லா விட்டால் தூக்கி எறிவார்கள்.

இவர்களது ஏனைய மேற்கோள்கள் அனைத்தும், சுய இன்பன் விபச்சாரம் என்று கருதி , மார்க்கத்தில் விபச்சாரம் பற்றி வந்த விடயங்களை மேற்கோளாக எடுத்து

தொடர்கிறார்கள். எனவே, இவர்களது கருதியீட்டின் கற்பனையால் அடிப்படையான விடயங்களின் ஆதாரமில்லாத் தன்மைகளையும், ஆதாரம் என்று இவர்கள் இட்டு கட்டியவைகளையும் , சுமத்திய அபாண்டங்களையும், எடுத்துக் காட்டியுள்ளோம்.

ஹதீஸ்களை விளங்கவும் அது எடுத்து வைக்கும் ஒவ்வொரு அம்சங்களையும் அணுவணுவாக அலசிடவும் உலமாக்கள் பல அடிப்படைகளை எமக்கு கற்றுத்தந்துள்ளார்கள். அவைகளை நாம் சரிவரப் புரிந்துகொண்டதன் பின்னர் ஹதீஸ்கள் என்ன சொல்கின்றன, அது தரும் போதனைகள் என்ன என்பன போன்ற பல விடயங்களை சரியாகவும் நேராகவும் புரிந்துக் கொள்ள முடியும். இல்லையெனில் வழிகேட்டை விலை கொடுத்து வாங்கிக்கொள்ளும் கதை தான் நமது கதையாகிவிடும்.
எனவே நாம் இந்த இல்மை விடயத்தில் முறையாக பயின்று கூடிய கவனம் செலுத்துவதோடு அதனை சரிவர நிறைவேற்றி அல்லாஹ்வின் அருளை வெகுமதிகளாக பெற்றுக் கொள்ள முயல்வோமாக.

எனவே அன்பின் இஸ்லாமிய சகோதரர்களே! அல்குர் ஆணையும் அஸ்ஸுனாவையும் எடுத்துவைக்கும் கருத்துக்களை நல்ல முறையில் அலசி நேரான பாதையில் சென்று வெற்றி பெற்றவர்களாக வாழ எம்மனைவருக்கும் அல்லாஹ் தௌபீக் செய்தருள்வானாக !

மேலும், உழ்ஹிய்யா விடயத்தில் மறுக்கப்பட்ட நாசரின் மறுப்பை திரும்ப திரும்ப ஆதாரமாக எடுத்துக் காட்டி தடுமாறுவதையும் இதே விமர்சன தொடரில் எடுத்துக் காட்டியுள்ளோம். அது பற்றி எந்த பேச்சும் இல்லை. அந்த விமர்சனத்துக்கு எப்போது தான் பதில் தருவார்களோ ?? இவர்களது தொய்ந்து போன சாட்டையை எப்போது கையில் எடுப்பார்களோ ?

அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

<u>**மறுப்பு**</u>

(S.L.T.J) அல்லாஹ்வின் திருப் பெயரால்.

**இளைஞர்களே! சுய இன்பமும் விபச்சாரமே!**

இன்றைய நவீன உலகில் பல விதமான பிரச்சினைகள் இருப்பதை அன்றாடம் பார்த்து வருகிறோம்.அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைத் தேடி பல வழிகளிலும் மனிதன் முயன்று கொண்டிருக்கிறான் ஆனால் அவனால் அப்பிரச்சினைகளுக்கு தீர்வு சொல்ல முடியாமல் அவதிப் படுகிறான்.

ஆனால் இந்த நவீன யுகத்தில் கூட எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு சொல்லும் மார்க்கம் என்றால் ஒன்றுண்டென்றால் அது இஸ்லாமிய மார்க்கம் தான் என்பதை பலர் அறியாமலேயே இருக்கின்றார்கள்.

இன்றைய நாட்களில் உள்ள சிக்கள்களில் முதன்மையானதாக இருப்பது உடல் ஆசையைத் தீர்த்துக் கொள்ளத் துடிக்கும் செக்ஸ் தான் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்தில்லை.இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு பலரும் பலதரப்பட்ட விளக்கங்களைச் சொன்னாலும் அந்த விளக்கங்களால் முழுமையான தீர்வு கிடைப்பதில்லை என்பதே உண்மை.அதிலும் இன்றைய இளைஞர்களுக்கு மத்தியில் புரையோடிப் போயிருக்கும் ஒரு பாவகரமான செயல்தான் சுய இன்பம் என்பதும்.

இந்த சுய இன்பத்தைப் பற்றியோ அதனால் ஏற்படும் தீமைகளைப் பற்றியோ பெரும்பாலானவர்கள் பெரிதாக எதையும் நினைப்பதில்லை.அதற்க்கு மிக முக்கியமான காரணம் ஒரு சில வைத்தியர்களும்,ஆய்வாளர்களும்,அதுபோல் சில கட்டுரையாளர்களும் இதனால் எந்தத் தீங்கும் ஏற்படுவதில்லை என்ற கருத்தை மக்களிடம் விதைப்பது தான்.

முதலாவதாக இஸ்லாமிய மார்க்கம் இதைப் பற்றி என்ன சொல்கிறது என்பதைப் பார்த்து விட்டு விஞ்ஞான ரீதீயாக இவர்களின் கருத்து எந்தளவு பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதைப் பார்ப்போம்.

முதலாவது ஒருவன் சுய இன்பத்தினை நாடுவதற்கு என்ன காரணம் என்பதைப் பற்றி விஞ்ஞான உலகம் கூறும் போது பல காரணங்களைப் பட்டியலிடுகிறார்கள்.

1.தான் விரும்புகின்ற அல்லது ஆசைப்படுகின்ற பெண்னை அடைய முடியவில்லை என்பதால் அவளுடன் இருப்பதாக என்னிக் கொண்டு இந்த நிலைக்கு சிலர் சென்று விடுகின்றனர்.

2.தனிமையை அதிகம் விரும்புவது.

3.பாடசாலை,அல்லது கல்லூரியில் தன்னுடன் சேர்ந்திருக்கும் கெட்ட நண்பனின் தீய நடவடிக்கைகளால்.

4.அடிக்கடி ஏற்படுகின்ற தீய எண்ணங்கள்.

5.ஆபாச திரைபடம்,அல்லது புகைப்படங்களின் மோகம்.

இது அல்லாத இன்னும் பல காரணங்களைக் கூறினாலும் மிக முக்கியமானவைகளைப் மட்டுமே இங்கு நாம் பட்டியலிட்டுள்ளோம்.

இந்த வகையில் இப்படிப் பட்ட பிரச்சினைக்கு இஸ்லாம் என்ன தீர்ப்பைச் சொல்கிறது?

எந்நேரமும் நம்மை அல்லாஹ் கண்காணிக்கிறான் என்ற பயம் இருக்க வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்:
மனிதர்களே உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்த உங்கள் இறைவனை அஞ்சுங்கள்.அவரிலிருந்து அவரது துனையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும்,பெண்களையும் பல்கிப் பெருகச் செய்தான்.எவனை முன்னிருத்தி ஒருவரிடம் மற்றவர்கள் கோரிக்கை வைப்பீர்களோ அந்த அல்லாஹ்வை அஞ்சுங்கள்! உறவினர்கள் விஷயத்திலும்(அஞ்சுங்கள்!)அல்லாஹ் உங்களை கண்காணிப்பவனாக இருக்கிறான்.(4:1)

மனிதர்கள் பாவம் செய்யும் போது அல்லாஹ்வின் பயம் அவர்களிடம் இல்லாமல்ப் போய் விடுகிறது அதன் காரணத்தாத் தான் அல்லாஹ்வை மறந்து சிறு பாவம்,பெரும் பாவம் என எல்லாவெற்றையும் செய்கிறார்கள்.இப்படி பாவம் செய்ய துணியும் போது அல்லாஹ் நம்மை கண்காணிக்கிறான் என்பதை நினைத்து உடனே அதை விட்டும் நீங்கி விட வேண்டும்.

ஆனால் இந்த சுய இன்பம் என்ற பாவம் தொடர்ச்சியாக செய்யப் படும் போது அல்லாஹ் நம்மைக் கண்காணிக்கிறான் என்ற பயம் நமது உள்ளத்தை விட்டு அகன்று விடும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

சுய இன்பம் ஒரு வகையான விபச்சாரமே!

(நம்பிக்கை கொண்டோர்)தமது மனைவியர் அல்லது தமது அடிமைப் பெண்களிடம் தவிற தமது கற்பை காத்துக் கொள்வார்கள் அவர்கள் பழிக்கப் பட்டோர் அல்லர்.இதற்கு அப்பால் வேறு வழியை)தேடியவர்களே வரம்பு மீரியவர்கள்.(23:5,6,7)

மேற்கண்ட திருமறை வசனத்தில் அல்லாஹ் கூறியபடி வாழ்பவர்கள் தம்முடைய இச்சைகளைத் தீர்க்க நாடினால் தங்கள் மனைவியரிடத்தில் அல்லது தமது அடிமைகளிடத்தில் மாத்திரம் தான் தீ;ர்;த்துக் கொள்வார்கள் அதுவல்லாத வேறு எந்த வழிகளையும் நாட மாட்டார்கள் என்று இறைவன் கூறுகிறான்.இந்த வசனத்தில் இறைவன் பயன் படுத்தும் வேறு வழிகள் என்ற வாசகத்திலிருந்து சுய இன்பமும் அதிலே அடங்கும் என்பதை அறியலாம்.

அது மட்டுமல்லாமல் நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் இதைப் பற்றி மிகவும் தெளிவாக கூறியிருப்பதையும் நாம் பார்க்க முடிகிறது.

நபி(ஸல்)அவர்கள் கூறியதாக அபூ ஹ{ரைரா(ரழி)அவர்கள் அறிவிக்கிறார்கள்.இரண்டு கண்களும் விபச்சாரம் செய்கின்றன,இரண்டு கைகளும் விபச்சாரத்தில் ஈடுபடுகின்றன,இரண்டு கால்களும் விபச்சாரத்தில் ஈடுபடுகின்றன,மர்ம உருப்போ அதனை உண்மைப்படுத்துகிறது அல்லது பொய்ப்படுத்துகிறது. (நூல் : அஹ்மத் 10490)

மேற்கண்ட நபி மொழியில் நபி(ஸல்)அவர்கள் விபச்சாரம் எந்தெந்த உருப்புகளின் மூலம் உருவாகும் என்பதைப் பற்றி தெளிவு படுத்துகிறார்கள்.
அதில் கண்களின் மூலம் விபச்சாரம் நடக்கிறது என்று நபியவர்கள் குறிப்பிடுகிறார்கள்.இஸ்லாம் தடுக்கக் கூடிய காட்சிகளை பார்த்தல்,அண்ணியப் பெண்களை கெட்ட எண்ணங்களில் பார்ப்பது,ஆபாசப் படங்களைப் பார்ப்பது போன்றவைகள் இதில் அடங்கும்.

இரண்டு கைகளும் விபச்சாரத்தில் ஈடுபடுவதாகவும் நபியவர்கள் குறிப்பிடுகிறார்கள்.இதில் மேற்குறிப்பிட்ட காரணங்களுக்கு உதவி செய்வதும் அடங்கும்,அதிலும் குறிப்பாக நாம் தற்போது பேசிக்கொண்டிருக்கும் சுய இன்பம் தான் இதன் மூலம் நேரடியாக குறிப்பிடப் படுவதையும் நாம் அறியலாம்.

ஏனெனில் இரண்டு கைகளும் விபச்சாரத்தில் ஈடுபடுகிறது என்றால் அதற்கு மிக முக்கியமானது இந்தக் கைகள் தான் இந்தக் கைகளின் மூலம் தான் இன்றைய இளைஞர்கள் சுய இன்பத்தில் ஈடுபடுவதாக மருத்துவ உலகம் உருதிப் படுத்துகிறது.

அல்லாஹ் தனது திருமறையில் குறிப்பிடும் போது.
(நம்பிக்கை கொண்டோர்)தமது மனைவியர் அல்லது தமது அடிமைப் பெண்களிடம் தவிற தமது கற்பை காத்துக் கொள்வார்கள் அவர்கள் பழிக்கப் பட்டோர் அல்லர்.இதற்கு அப்பால் வேறு வழியை)தேடியவர்களே வரம்பு மீரியவர்கள்.(23:5,6,7)

உண்மையில் அல்லாஹ்வை கடவுளாக ஏற்று தன்னை முஸ்லிம் என்று சொல்லிக் கொள்பவர்கள் யாராக இருந்தாலும் தங்களுடைய ஆபாச உணர்வுக்கான தேவையை அல்லாஹ் கூறிய இரண்டு வழிகளில் மாத்திரம் தான் நிறைவேற்ற வேண்டுமே தவிர வேறு வழிகளை தேடக்கூடாது.

அதிலும் அல்;லாஹ் கூறக்கூடிய இரண்டாவது வழிமுறை நம்முடைய காலத்தில் நடைமுறையில் இல்லை என்பதால் ஒவ்வொரு முஸ்லிமும் தங்களின் உடலுறவுத் தேவையை தமது மனைவியிடத்தில் மாத்திரம் தான் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மனைவியல்லாதவர்களுடன் தனது தேவையை பூhத்தி செய்வதற்கு முனைவதோ,அல்லது சுய இன்பம் போன்றவற்றில் ஈடுபடுவதோ அல்லாஹ்விடத்தில் வரம்பு மீறிய குற்றத்தை ஏற்படுத்தும் என்பது மேற்கண்ட திருமறை வசனத்தில் இருந்து தெளிவாகத் தெரிகிறது.

மறுமை நாளின் விசாரனையைப் பற்றி இறைவன் குறிப்பிடும் போது (மறுமை நாளில்)அவர்களின் நாவுகளும்,கைகளும்,கால்களும் அவர்களுக்கு எதிராக அவர்கள் செய்தவை குறித்து சாட்சியமளிக்கும்.(24:24)

இன்றைய தினம் அவர்களின் வாய்களுக்கு முத்திரையிடுவோம்,அவர்கள் செய்து கொண்டிருந்தது பற்றி அவர்களின் கைகள் நம்மிடம் பேசும்;;.கால்கள் சாட்சி கூறும்.(36:65)

முடிவில் அவர்கள் அங்கே வந்ததும்,அவர்களுக்கு எதிராக அவர்களின் செவியும்,பார்வைகளும்,தோல்களும் அவர்கள் செய்து கொண்டிருந்தவை பற்றி சாட்சி சொல்லும்.(41:20)

மேற்கண்ட குர் ஆன் வசனங்களில் மறுமை நாளின் விசாரனை பற்றி மிகத் தெளிவாக இறைவன் எடுத்துரைக்கிறான்.

மறுமையில் ஒவ்வொரு உருப்பும் தாம் செய்தவைகளைப் பற்றி விசாரிக்கப் படும்.அப்போது தாம் செய்த நல்ல கெட்ட காரியங்களுக்கு அந்த உருப்புகளே சாட்சியாகவும் மாறிவிடும் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை.

ஆக சுய இன்பம் போன்ற காரியங்களை நாம் செய்வதின் மூலம் மறுமை விசாரனையில் அல்லாஹ்விடத்தில் நமது உருப்புகளே நம்மைக் காட்டிக் கொடுத்து அதன் மூலம் வரம்பு மீறியோராகி,நஷ்டத்திற்குள்ளாகி விடுவோம்.
அதே போல் இரண்டு கால்களும் விபச்சாரத்தில் ஈடுபடுகிறது என்றும் நபியவர்கள் குறிப்பிடுகிறார்கள்.உண்மையில் விபச்சாரம் செய்வதற்காக செல்லுதல்,அல்லது அதற்கு உதவி செய்வது,ஆபாசப் படங்கள் பார்ப்பதற்கு செல்லுதல்,இஸ்லாம் தடுத்த இடங்களுக்கு செல்லுதல் போன்றவைகள் கால்களால் செய்யும் விபச்சாரத்தில் அடங்கும்.

இதிலிருந்தும் நாம் அல்லாஹ்விடம் பாதுகாப்பை கேட்க வேண்டும்.

சுய இன்பத்தின் மூலம் ஏற்படும்(உடலியல்)விபரீதங்கள்.

உலக மக்கள் அனைவருக்கும் எதிரான இந்த சுய இன்பம் என்ற மிகக் கொடூரமான மன நோயை பெரும்பாலான மருத்துவர்களும்,விஞ்ஞானிகளும் கூடாது என்று தடுத்தாலும் ஒரு சிலர் இதனை ஆதரிக்கவும் செய்கின்றனர்.

இப்போது அவர்கள் சுய இன்பத்தை ஆதரிப்பதற்கு கூறும் காரணத்தையும்,வாதங்களையும் அதில் உள்ள தவறுகளையும் ஆராய்வோம்.

அவர்களின் வாதம் :

சுய இன்பத்தின் மூலம் ஒருவன் யாருக்கும் தொந்தரவுகளைக் கொடுக்காமல் தனிமையில் அவனது தேவையை தீர்த்துக் கொள்கிறான் இதன் மூலம் அவன் மற்றவர்களுக்கு நல்லதைத் தான் நாடுகிறானே தவர யாருக்கும் கெடுதி செய்யவில்லை.

நமது பதில் :

ஒருவன் யாருக்கும் கஷ்டத்தை ஏற்படுத்தவில்லை என்பதற்க்காக ஒரு குற்றத்தை ஆதரிப்பது ஒரு அறிவாளியின் செயல் அன்று.அத்துடன் இப்படிப் பட்டவர்கள் இதுவல்லாத மற்ற எல்லா குற்றங்களுக்கும் இந்த அளவுகோளையே வைப்பார்களா? யாருக்கும் எந்தக் கஷ்டமும் கொடுக்காமல் ஒருவன் போதை மாத்திரைகளையோ,அல்லது போதை ஊசிகளையோ பயன்படுத்தினால் இவர்கள் அதை ஆதரிக்கிறார்களா? மறுக்கிறார்களா? மறுக்கத் தான் செய்கிறார்கள்.

ஏனெனில் அது உடலுக்கு கேடானது என்பதுதான் அவர்களின் பதில்.அதுபோல் சுய இன்பமும் உடலுக்கு கேடானது என்பதில் சந்தேகமில்லை.(இதைப் பற்றி பின்பு விரிவாக விளக்கப் படும்.)ஆக ஒரு குற்றத்தை தடுத்தல் என்ற முடிவுக்கு வரும் போது அது அவனுடன் மட்டும் தொடர்பு பட்டாலும்,மற்றவர்களுடன் தொடர்பு பட்டாலும் குற்றம்,குற்றமே!

அவர்களின் வாதம் :

சுய இன்பத்தில் ஒருவன் ஈடுபடுவதின் மூலம் இந்திரியத்தை வெளிப்படுத்துவதினால் எந்த பிரச்சினையும் இல்லை.ஆதலால் இதைத் தடுக்க வேண்டிய அவசியம் ஏதும் இல்லை.

சுய இன்பத்தின் மூலம் வெளியாக்கப் படும் இந்திரியமும்,தூக்கத்தில் வெளியாகும் இந்திரியமும் சமமானதே ! தூக்கத்தில் அறியாமலும்,சுய இன்பத்தில் அறிந்த நிலையிலும் இந்திரியம் வெளியாகிறது.இதைத் தவிர வேறு எந்த வித்தியாசமும் இல்லை.

இது நாம் உமிழ் நீரை உமிழ்வதைப் போன்றதே உமிழ் நீர் எப்படி உடனே சுரந்து விடுகிறதோ அது போல்தான் இந்திரியம் வெளியேற்றப் பட்ட சில மணி நேரத்திலேயே சுரந்து விடும்.இதனால் எந்த சிக்களும் உடலுக்கு ஏற்படாது.

நமது பதில் :

சுய இன்பத்தின் மூலம் வெளியாகும் இந்திpரியமும்,தூக்கத்தில் வெளியாகும் இந்திரியமும் சமமானதுதான் அதனால் அதனை தடுக்கத் தேவையில்லை என்பது அவர்களின் வாதம்.

உண்மையில் வெளியாகும் அளவில் வேண்டுமானால் இரண்டும் சமமாக இருக்களாம்.ஆனால் முறைமையில் இரண்டுக்கும் பெரிய வித்தியாசம் உள்ளது.

தூக்கத்தில் இந்திரியம் வெளியாவது என்பது இயற்க்கை.சுய இன்பத்தின் மூலம் வெளியாவது என்பது இயற்கைக்கு மாற்றமான செயற்கை

.

உடலில் ஏற்படும் எந்த மாற்றமும் இயற்கையில் ஏற்பட்டால் பிரச்சினை இல்லை.(இயற்கை அளவுக்கு அதிகமானாலும் பிரச்சினையாகும்.அப்படியிருக்க செயற்கை முறையில் மாற்றம் ஏற்படுவது உடலுக்கு கேடானது என்பதில் எந்த மருத்துவருக்கும் மாற்றுக் கருத்தில்லை) மாறாக செயற்கையில் நாம் மாற்றத்தை ஏற்படுத்த முயன்றால் அது பிரச்சினைதான்.

உதாரணத்திற்கு ஒருவர் மெலிந்தவராக இருந்து,இயற்கையாக(அளவாகக்) கொளுத்தால் எந்தப் பிரச்சினையும் இல்லை.ஆனால் செயற்கை முறைகளை பயன் படுத்தி ஒருவர் தனது பருமனை அதிகரித்துக் கொண்டால் அது உடலுக்கு ஏகப்பட்ட சிக்களை ஏற்படுத்தி விடும்.

அது போல்தான் தூக்கத்தில் ஒருவருக்கு இந்திரியம் வெளிப்பட்டால் அதன் மூலம் உடலுக்கு நல்லது ஏற்படும்.

சுய இன்பத்தின் மூலம் இந்திரியத்தை வெளிப்படுத்தினால் உடலுக்கு கேடுதான் விளையும்.

இந்தக் கருத்தில் தான் பெரும்பாலான மருத்துவர்களும்,விஞ்ஞான ஆய்வாளர்களும் இருக்கின்றார்கள்.

அத்துடன் உமிழ் நீர் சுரப்பதைப் போல் இந்திரியமும் சுரந்து விடும் என்பதால் இதை ஆதரிக்க முடியாது.ஏனெனில் இந்திரியம் சுரக்கிறதா இல்லையா என்பது பிரச்சினை இல்லை.வெளியேற்றும் முறை சிறந்ததா? சுpக்களானதா? என்பதுதான் பிரச்சினை.

சுய இன்பத்தின் மூலம் இந்திரியத்தை வெளியேற்றுவது உடலுக்கு கேடானது என்று உருதியான பின் இந்திரியம் மீண்டும் சுரந்தாலும்,சுரக்கா விட்டாலும் அதை சுய இன்பம் மூலம் வெளியாக்க கூடாது.

அவர்களின் வாதம் :

சுய இன்பத்தின் மூலம் உடலுக்கு எந்த கேடும் ஏற்படவில்லையே! பிறகு ஏன் இதைத் தடுக்க வேண்டும்?

நமது பதில் :

சுய இன்பத்தை ஆதரிக்கக் கூடியவர்கள் எடுத்து வைக்கும் வாதங்களில் இதுதான் மிக முக்கியமானது.

அவர்கள் சொல்லும் இந்த பதில்தான் அதிகமான இளைஞர்களை இந்த கெட்ட நடத்தையின் பக்கம் இழுப்பதற்கு காரணமாக இருக்கிறது.

சுய இன்பத்தில் ஈடுபடுவதின் மூலம்,அதில் ஈடுபடுபவர்களின் உடலுறவு நாட்டம் படிப்படியாகவே குறைந்து விடுகிறது.ஏனெனில் சுய இன்பத்தின் மூலம் அதில் ஈடுபடக்கூடியவன் அவசரமாக இந்திரியத்தை வெளிப்படுத்தவே நினைப்பான் அப்படி அவசரமாக வெளிப்படுத்திப் பழகிவிடுபவர்கள் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடும் போது,அவசரமாக இந்திரியம் வெளியாகிவிடுவதால்.அவர்களின் இல்லற வாழ்க்கையில் இன்பம் இல்லாமல் ஆகிவிடுவதின் மூலம் அவர்களின் மனைவியர் வேறு வழிகளை நாடி வழிகெட்டுப் போவதற்கு அவர்களே காரணமாகவும் ஆகிவிடுகின்றனர்.

தாம் விபச்சாரத்தில் ஈடுபட்டு விடுவோம் என்ற பயம் ஏற்பட்டால் சுய இன்பம் கண்டு கொள்ளலாமா?(சகோதரர் பி.ஜெ அவர்கள் இது தொடர்பாக தமது இணையத் தளத்தில் வெளியிட்ட பதிலையே இதற்கு பதிலாக வெளியிடுகின்றோம்.)

இமாம் அஹ்மத் பின் ஹம்பல்,இப்னு ஹஸ்ம் போன்ற மிகச் சிறந்த அறிஞர்கள் இவ்வாறு (சுய இன்பத்தில்) ஈடுபடுவது குற்றமில்லை என்று கூறியதை அடிப்படையாக வைத்து ஹராமை ஹலாலாக்கும் கொள்கையுடைய யூசுப் அல் கர்ளாவி போன்றவர்கள் இது ஹலால் என்று பத்வா கொடுப்பதால் எவ்வித உறுத்தலும் இல்லாமல் இதைச் சில இளைஞர்கள் செய்து வருகின்றார்கள்.

இவர்கள் அனைவரும் விபச்சாரத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளும் நிர்பந்தத்தைத் தான் காரணம் காட்டுகிறார்கள்.
ஆனால் திருக்குர்ஆனும்,நபி வழியும் இவர்களின் கருத்துக்கு எதிராகவே அமைந்துள்ளன.

(நம்பிக்கை கொண்டோர்)தமது மனைவியர் அல்லது தமது அடிமைப் பெண்களிடம் தவிற தமது கற்பை காத்துக் கொள்வார்கள் அவர்கள் பழிக்கப் பட்டோர் அல்லர்.இதற்கு அப்பால் வேறு வழியை)தேடியவர்களே வரம்பு மீறியவர்கள்.(23:5,6,7)

ஆண்கள் தமது மனைவியர் மூலம் அல்லது அடிமைப் பெண்கள் மூலம் தவிர மற்ற வழிகளை விட்டும் கற்பைக் காத்துக் கொள்ள வேண்டும் என்றும்,இ;வ்விரு வழிகளில் தவிர மற்ற வழிகளில் இச்சையை தீர்த்துக் கொள்வோர் பழிக்கப் பட்டவர்கள் என்றும்,வரம்பு மீறியவர்கள் என்றும் இவ்வசனங்கள் தெளிவாக அறிவிக்கின்றன.இப்போது அடிமைப் பெண்கள் இல்லாததால் மனைவியர் தவிர மற்ற வழிகளில் இச்சையைத் தீர்த்துக் கொள்வது வரம்பு மீறிய குற்றம் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

விபச்சாரத்தில் விழுந்து விடுவோம் என்று அஞ்சும் நிலை இப்போது ஏற்படுவது போலவே நபியவர்களின் காலத்திலும் இருந்தது.இதற்கு மாற்ற வழியை நபி(ஸல்)அவர்கள் நமக்குக் கற்றுத் தந்துள்ளார்கள்.

நபி(ஸல்)அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் மஸ்ஊத்(ரழி)அவர்கள் அறிவிக்கிறார்கள்.
உங்களில் எவர் தாம்பத்தியத்திற்கு சக்தி பெற்றிருக்கிறாறோ அவர் திருமணம் செய்து கொள்ளட்டும்.ஏனெனில் திருமணம்(அந்நியப் பெண்களைப் பார்ப்பதை விட்டும்)பார்வையைக் கட்டுப் படுத்தும்.கற்பைக் காக்கும்.யார் அதற்கு சக்தி பெறவில்லையோ அவர் நோன்பு நோறகட்டும் அது அவரது இச்சையை கட்டுப்படுத்தும்.(புகாரி : 1905)

அப்துர் ரஹ்மான் பின் யஸீத்(ரஹ்)அவர்கள் கூறியதாவது :
நானும்,அல்கமா,மற்றும் அஸ்வத் ஆகியோரும் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத்(ரழி)அவர்களிடம் சென்றோம்.அப்போது அப்துல்லாஹ்(ரழி)அவர்கள் (பின்வருமாறு)சொன்னார்கள்.நாங்கள் (வசதி,வாய்ப்பு)ஏதுமில்லாத இளைஞர்களாக நபியவர்களுடன் இருந்தோம் அப்போது நபியவர்கள் எங்களிடம் இளைஞர்களே! தாம்பத்தியம் நடத்த சக்தி பெற்றோர் திருமணம் முடித்துக்கொள்ளட்டும்.ஏனெனில் அது (தகாத)பார்வையை கட்டுப்படுத்தும்.கற்பைக் காக்கும்.அதற்கு சக்தி பெறாதோர் நோன்பு நோற்றுக் கொள்ளட்டும்.ஏனெனில் நோன்பு(ஆசையை)கட்டுப் படுத்தக் கூடியதாகும்.என்று சொன்னார்கள்.(புகாரி : 5066)

நபியவர்களின் ஆட்சியின் துவக்க காலத்தில் ஏற்பட்ட வறுமையைப் போல் இனி ஒரு காலத்தில் வறுமை ஏற்பட முடியாது என்பதை நாம் அறிந்து வைத்துள்ளோம்.ஒரு நாளைக்கு ஒரு பேரிச்சம் பழம் கூட கிடைக்காத,ஒரு ஆடைக்கு மறு ஆடை இல்லாத அளவுக்கு அந்த வறுமை இருந்தது.பலருக்கு பள்ளிவாசலே வீடாக இருந்தது.

இந்த நிலையில்தான் திருமணம் செய்வதற்க்கான மஹர் இன்ன பிற அடிப்படைத் தேவைகளுக்குக் கூட நபித்தோழர்களிடம் ஒன்றும் இல்லாததால் திருமணம் செய்ய முடியாத நிலையிpல் பலர் இருந்தனர்.அவ்வாறு திருமணம் செய்ய முடியாதவர்கள்

தம்மைக் கட்டுப் படுத்திக் கொள்ள நோன்பு எனும் ஆயுதத்தை கையில் எடுக்குமாறு நபியவர்கள் வழிகாட்டியுள்ளனர்.

சுய இன்பம் செய்வதற்கு அனுமதியிருந்தால் அதைச் சொல்வதற்கு பொருத்தமான இடம் இதுதான்.ஆனால் அவ்வாறு கூறாமல் நோன்பு நோற்று உணர்வுகளை கட்டுப் படுத்துமாறு நபி(ஸல்)அவர்கள் வழிகாட்டி விட்டனர்.

நபியவர்கள் காட்டிய இந்த வழியை விட சுய இன்பம் விபச்சாரத்தை தடுக்கக் கூடியதாக இருக்காது.உணர்வுகளைக் கட்டுப் படுத்தும் பயிற்சியில்லாமல் இப்படி நடந்து கொள்பவர்கள் வாய்ப்புக் கிடைத்தால் எளிதில் விபச்சாரத்தில் விழுவதற்குத் தான் இது வழிவகுக்கும்.
நபியவர்களின் காலத்தில் போர் செய்வதற்க்காக வெளியே செல்கின்ற நேரத்தில் மனைவியர் இல்லாததால் விபச்சாரத்தில் விழுந்து விடுவோம் என்று நபித்தோழர்கள் அஞ்சினார்கள் எனவே அவர்கள் ஆண்மை நீக்கம் செய்ய அனுமதி கேட்ட போது நபி(ஸல்)அவர்கள் அனுமதி மறுத்து விட்டனர்
.
இப்னு மஸ்¥த்(ரலி)அவர்கள் கூறியதாவது :
நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் ஒரு போரில் கலந்து கொண்டிருந்தோம். அப்போது எங்களடன் துணைவியர் எவரும் இருக்கவில்லை. எனவே, நாங்கள்,இறைத்தூதர் அவர்களே! நாங்கள் காயடித்து (ஆண்மை நீக்கம் செய்து) கொள்ளலாமா? என்று கேட்டோம். அப்போது நபி(ஸல்) அவ்வாறு செய்ய வேண்டாமென எங்களைத் தடுத்தார்கள்.(புகாரி : 5071)

கைஸ் இப்னு அபீ ஹாஸிம்(ரஹ்)அவர்கள் கூறியதாவது :
அப்துல்லாஹ் இப்னு மஸ்¥த்(ரலி)அவாகள் நாங்கள் இறைத்தூதர்(ஸல்) அவர்களுடன் ஓர் அறப்போரில் கலந்து கொண்டிருந்தோம். அப்போது எங்களுடன் (எங்கள் துணைவியரோ, வேறு பெண்களை மணந்துகொள்ளத் தேவையான செல்வமோ) ஏதும் இருக்கவில்லை. எனவே நாங்கள் இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம்,(ஆண்மை நீக்கம் செய்துகொள்ள) நாங்கள் காயடித்துக் கொள்ளலாமா? என்று கேட்டோம். அவ்வாறு செய்யவேண்டாமென நபி(ஸல்) அவர்கள் எங்களுக்குத் தடை விதித்தார்கள். அதன் பின்னர் ஆடைக்கு பதிலாகப் பெண்களை மணந்துகொள்ள எங்களுக்கு அனுமதியளித்தார்கள் என்று கூறிவிட்டு, பின்வரும் வசனத்தை அன்னார் எங்களுக்கு ஓதிக்காட்டினார்கள்.
இறை நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ் உங்களுக்கு அனுமதித்துள்ள தூய்மையான பொருட்களை நீங்கள் விலக்கிக் கொள்ளாதீர்கள். மேலும், நீங்கள் வரம்புமீறாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுவோரை நேசிப்பதில்லை(5:87) (புகாரி : 5075)

குறைந்த மஹரைக் கொடுத்தாவது திருமணம் தான் செய்ய வேண்டும் என்று நபியவர்கள் வழிகாட்டியுள்ளார்கள்.

சுய இன்பம் என்பது விபச்சாரமாகவே நபித்தோழர்களால் கருதப்பட்டதால் தான் எந்த நபித்தோழரும் சுய இன்பம் செய்து கொள்ளலாமா என்று கேட்டதாக காண முடியவில்லை.

மார்க்கத்தில் இது தடை செய்யப் பட்டது என்றாலும் விபச்சாரத்தில் விழுந்து விடாமல் தற்காத்துக் கொள்ளும் நிர்ப்பந்தம் ஏற்பட்டால் இவ்வாறு செய்யலாமா? என்று சிலர் வாதிடுகின்றனர்.இவ்வாறு வாதிடுவதும் தவறானதாகும்.

மார்க்கத்தில் அனுமதிக்கப் பட்ட வழிகள் இல்லா விட்டால் தான் நிர்ப்பந்தம் என்ற நிலை ஏற்படும்.

நபித்தோழர்களுக்காவது திருமணம் முடிக்க வசதிகள் இல்லாத நிலை ஏற்பட்டிருந்தது.இன்று அத்தகைய நிலை இல்லை.மேலும் குறைந்த மஹருக்கு வாழ்க்கைப் பட பெண்கள் காத்திருக்கிறார்கள்.இளைஞர்கள் தக்க வயது வந்த பின்பும் பொருந்தாத காரணங்கள் கூறி திருமணத்தை தள்ளிப் போட்டு விட்டு அதை நிர்பந்தம் என்று சொல்ல முடியாது.

மேலும் வெளிநாட்டுக்குச் சென்று பல வருடங்கள் தங்கினால் இல்லற இன்பம் கிடைக்காது என்பது சாதாரணமாக அனைவருக்கும் தெரியும்.தெரிந்து கொண்டே இந்த நிலையை நாமாக தலையில் போட்டுக் கொண்டால் அது நிர்பந்தம் ஆகாது.

ஒரு ஊரில் பன்றியைத் தவிர வேறு ஏதும் கிடைக்காது என்று திட்டவட்டமாகத் தெரிகிறது.கண்டிப்பாக பன்றியைத் தான் தின்னும் நிலை ஏற்படும் என்று தெரிந்தால் அந்த ஊருக்குச் சென்று பன்றியைச் சாப்பிடுவது நிர்பந்த நிலையில் சேராது.

தாமாகச் செத்தவை,இரத்தம்,பன்றியின் இறைச்சி,அல்லாஹ் அல்லாதவர்களுக்காக அறுக்கப் பட்டவை ஆகியவற்றையே அவன் உங்களுக்கு தடை செய்துள்ளான்.வரம்பு மீறாமலும்,வலியச் செல்லாமலும் நிர்பந்திக்கப் படுவோர் மீது எந்தக் குற்றமும் இல்லை.அல்லாஹ் மன்னிப்பவன்,நிகரற்ற அன்புடையோன்.(2:173)

வலியச் செல்லாத நிலையில் இருந்தால்தான் அது நிர்பந்தம்,நாமாக வலியச் சென்று அந்த நிலையை ஏற்படுத்திக் கொண்டால் அது நிர்பந்தம் இல்லை என்று மேற்கண்ட வசனங்கள் குறிப்பிடுகின்றன.

மேலும் இது விபச்சாரத்தை தடுக்காது தூண்டவே செய்யும் என்பதையும் கவணத்தில் கொள்ள வேண்டும்.

சரி குடும்ப நிலை காரணமாக வெளிநாட்டுக்கு வந்து விட்டு மனைவியின் துணையில்லாமல் இருக்கிறோம் அந்த நிலையில் இது போன்ற கெட்ட எண்ணம் தோன்றாமல் பார்த்துக் கொள்ள முடியாதா? நிச்சயம் முடியும்.

இந்த நிலை ஏன் ஏற்படுகிறது? விபச்சாரத்தைத் தூண்டும் சினிமாக்கள்,பாலியல் காட்சிகளின் வீடியோக்கள் மற்றும் ஆபாசக் காட்சிகளை எவ்வித உருத்தலும் இன்றி பார்ப்பது தான் இதற்கு முதல் காரணமாக உள்ளது.பொதுவாகவே இவை தவிர்கப்பட வேண்டியவை என்றாலும் மனைவியின் துணையின்றி இருக்கும் போது அதிகம் தவிர்கப் பட வேண்டியதாகும்.இது போன்ற காட்சிகளைப் பார்ப்பது நம்மை தீய செயலில் தள்ளும் என்பதை உணர வேண்டும்.

மேலும் நபியவர்கள் கற்றுத் தந்த முறையில் நோன்பு நோற்று கட்டுப் படுத்திக் கொள்ளலாம்.

தனிமையாக இருப்பதால் இது போன்ற எண்ணம் ஏற்பட்டால் நல்ல நண்பர்களுடன் சேர்ந்து தங்குவதின் மூலம் தீய எண்ணத்தை மாற்றலாம்.வணக்க வழிபாடுகள் மற்றும் பொதுச் சேவைகளில் ஈடுபடுவதின் மூலமும் இது போன்ற செயலை விட்டு ஒழிக்கலாம்.

இப்படி சுய இன்பம் செய்த பின் ஒரு அழகான பெண்ணுடன் தனித்திருக்கும் நிலை ஒருவருக்கு ஏற்பட்டால் அப்போது கட்டுப்பாடுடன் இருக்க சுய இன்பப் பழக்கம் உதவவே செய்யாது.நோன்பு நோற்று நல்லொழுக்கத்தை உயிர் மூச்சாகக் கொண்டால் அது நிச்சயம் விபச்சாரத்தில் இருந்து காப்பாற்றும்.

இதையும் மீறி உடம்பில் ரொம்ப முறுக்கேறிவிட்டால் தூக்கத்தில் ஸ்கலிதம் ஆவதின் மூலமாக அதற்கு அல்லாஹ் இயற்கை வடிகாலை அமைத்துள்ளான் என்பதையும் கவணத்தில் கொள்ள வேண்டும்.

இது போன்ற செயலில் கடந்த காலங்களில் ஈடுபட்டவர்கள் அல்;லாஹ்விடம் பாவ மன்னிப்பைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

அன்பின் சகோதரர்களே! இளைஞர்களே! இந்த கேடு கெட்ட செயல்பாடு ஒரு குறுகிய நோக்கம் கொண்டதே! இதில் ஈடுபடுவது எதிர்காலத்தையே நாசம் செய்துவிடும் என்பதில் அனுவளவும் சந்தேகமில்லை.

ஆக நம்முடைய சிறிது நேர இன்பத்திற்க்காக எதிர்கால வாழ்க்கையையே கேள்விக்குள்ளாக்கும் இத்தகைய காரியங்களை நாம் கண்டிப்பாக தவிர்த்துத்தான் ஆக வேண்டும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் நம்முடைய அனைத்துக் காரியங்களையும் இலேசாக்குவானாக!

**தொகுப்பு : சிறீலங்காமுவர்ஸ்.கொம்**

www.srilankamoors.com